முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 774**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**11.11.2021**, வியாழக்கிழமை

1. தர்மசக்தியே அரங்கா போற்றி
தவசியாய் வாழும் தேசிகா போற்றி
பெருமைமிக்க அரங்கன் உன் வழி இந்த
பேருலகம் ஞான லோகமாகக்கூடும்
2. கூடவே அரங்கன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
குவலயத்தில் சுப்ரமணியர் யானும் எடுத்துரைப்பேன்
அருந்தவசி அரங்கன் மார்க்கம்
(முருகப்பெருமானின் ஆசி பெற்று செய்தற்கு அரிய தவங்களை செய்தவரே அரங்கமகான்)
அகிலத்தை உயர்மாற்றம் செய்தருளும்
3. அருளவே அரங்கன் வழிவழி தொண்டர்கள்
அற்புதம்பட உலகத்தில் ஞானஆட்சி
பெருமைபட ஞானவான்கள் தலைமைபட
பிசகில்லா பிரணவக்குடிலின் சக்தி கொண்டு நடத்தக்கூடும்
4. கூடவே இந்தவித அற்புதத்தை குறையில்லா அரங்கன் தர்மமாக்கி
உலகமெங்கும் ஞானமாக சித்தித்து வருதல்காண
ஞானிகளை வணங்கி வரும் மக்களெல்லாம் ஞானவான்களாகி இந்த கலியுகத்தில்
ஞானபூஜைசெய்து உலகத்தையே ஞானலோகமாக மாற்றக் கூடும்
5. கூடவே அற்புதத்தை நிகழ்த்த
குருஅரங்கனுக்கு ஆறுமுகன் யான்
ஈடேற்றம் நித்தம் நித்தம் செய்துவர
இனிதே அரங்கன் கரம்வழி தீட்சை பெற்றோரெல்லாம்
6. பெற்றவர்களெல்லாம் பெரும்பேறு கண்டு
இனி பிறவாத அற்புதத்தை காணக்கூடும்
உற்றதொரு ஞானவான்களெனும் அடையாளமோடு
உலகமாற்றத்தில் பங்குபெறக்கூடும்
7. கூடவே அரங்கன் சக்திக்குள்
குறையில்லா நன்மைகள் அடைய
நாடி வாருங்கள் ஓங்காரக்குடில் நோக்கி
நன்மைகண்டு ஞானதேசிகன் வழி

8. தேசிகன் வழி உலக மக்கள் யாவரும்
தெய்வீக நிலை பெற்று இனிதே
ஆசிபட உலகமெங்கும் ஞான ஆட்சி
ஆக்கம் செய்து அழியாமை பெறக்கூடும்

9. கூடுமே உலகமெங்கும் அமைதி
குறையில்லாத இயற்கை வளமோடு
நாடெங்கிலும் அற்புதம் ஞானதேசிகன் வழி
ஆறுமுகன் யான் நடத்தி அருள்வேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*1. அம்மை பார்வதி அருந்தவப் புதல்வனே
நம்மை காப்பான் நாட்டை ஆள்வான்!*

*2. மலைவாழ் மங்கையின் மாதவப் புதல்வனே
நிலையான வாழ்வும் நிலைக்கும் சித்தியே!*

*3. பிறப்பை அறுக்கும் பெருந் தகையாளனை
சிறப்புடன் பூசிக்க சித்தி உண்டாம்!*

*4. எந்தை வேலவன் இணையடி போற்றிட
சிந்தை தெளிவாம் சிவகதியாமே!*

*5. ஞானமாம் வேலனை நாளும் போற்றிட
ஈனம் தவிர்த்தே இன்பம் உண்டாம்!*

*6. பற்றற்ற வேலவன் பதத்தை போற்றிட
நற்றவம் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*

*7. சத்தியவான் வேலவன் தாளினைப் போற்றிட
நித்திய வாழ்வும் நிலைக்கும் சித்தியே!*

*8. ஆற்றலாம் வேலவன் அருளினைப் போற்றிட
கூற்றுவனை வெல்ல குறிப்பும் தோன்றுமே!*

*9. பிறப்பை அறுக்கும் பெருந்தகை வேலனை
சிறப்புடன் போற்றிட சித்தியும் உண்டாம்!*

*10. நாட்டமாம் வேலனை நாளும் போற்றிட
வாட்டமும் இல்லை மனமும் செம்மையே!*

*11. சித்தியாம் வேலவன் திருவடியை போற்றிட
முக்தியும் உண்டாம் முனையும் திறக்குமே!*

12. *அருளாளன் அருணகிரி அருளிய பாடல்கள்*
*இருளெல்லாம் விலகி வாழ்வில் இன்பமும் உண்டாம்!*

13. *அன்னையாம் மணிவாசகர் அருளினை போற்றிட*
*என்னையும் காத்து எனக்கருள் செய்தாரே!*

14. *அம்மையாம் வள்ளலார் அருளினை போற்றிட*
*நம்மையும் காத்துமே நாட்டையும் ஆள்வார்!*

15. *திருஞானசம்பந்தன் திருவடியை போற்றிட*
*இருளெல்லாம் விலகி இன்பமும் உண்டாம்!*

16. *வளமாம் வள்ளலார் வழங்கிய அருட்பாவை*
*நலமுடன் கற்றிட நாளும் சித்தியே!*

17. *தாயாம் வள்ளலார் தந்த அருட்பாவை*
*வாயார போற்றியே மகிழ்கின்றேனே!*

18. *ஆற்றலாம் அருணகிரி அருளிய அலங்காரம்*
*மாற்றமும் உண்டு மனமும் செம்மையே!*

19. *அருளாம் வேல்விருத்தம் அருளிய மயில்விருத்தம்*
*இருளெல்லாம் விலகி ஏற்றம் உண்டாம்!*

20. *இடரும் இருவினை இடரா அகலுமே*
*தொடரும் மயில்விருத்தம் சொல்லிய பாட்டே!*

**ஒரு பத்தும் பத்தும் ஓதிய புகலுரை**
**இரு பத்தாய் எனக்கே இயம்பினாரே.**

**– ஆறுமுக அரங்கமகா தேசிகர்**